**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.60/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பன்னீர்செல்வம் SSI-447 | Prosecution | LW-15 as PW-4 |
| Father Name | | Defence | |
| Station | ஆணைக்காரன் சத்திரம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | /2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 02.02.2026 **எதிரி ஆஜர்** **சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயப்பிரக்காஷ், ஆய்வாளர் முருகேசன் மற்றும் ஆய்வாளர் அமுதராணி அவர்களின் கையெழுத்தும், கையொப்பாமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 24.12.2020ம் தேதி காலை 7.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயப்பிரக்காஷ் நிலைய பொறுப்பில் இருந்த போது மஞ்சுளா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று ஆணைக்காரன் சத்திரம் காவல்நிலைய குற்ற எண்.1124/2020 இ.த.ச பிரிவுகள் 279, 304(A) ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததை ஆய்வாளர் எடுத்துக் கொண்டு கடந்த 24.12.2020ம் தேதி காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயகாந்த் மற்றும் ரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அ.சாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.02 19:13:03 +0530

4. வழக்கின் எதிரியை தேடிய நிலையில் புத்தூர் கடைத்தெருவில் நின்றுகொண்டிருந்தவரை 25.12.2020 ம் தேதி 13.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் இந்த வழக்கில் இறந்த நபரின் பிரேதத்தை 24.12.2020 ம் தேதி 9.00 மணி முதல் 10.00 மணி வரை சீர்காழி அரசு மருத்துவமனையில் சென்று பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்துள்ளார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கில் இறந்த ஜோதி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயப்பிரக்காஷ் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை அனுப்பி வைத்தார். வழக்கின் சாட்சிகள் 1 முதல் 13 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் ஆய்வாளர் முருகேசன் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்புகளை ஆய்வாளர் அமுதராணி விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். பிரேத அறிக்கை அளித்த மருத்துவர் தினேஷ் அவர்களை விசாரணை செய்துவாக்குமூலம் பெற்று அவரிடமிருந்து பிரேத அறிக்கை பெற்றுள்ளார். **அந்த பிரேத அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 20.08.2021 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304(A) கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நிலுவையில் உள்ள வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கை சரியாக விசாரணை செய்யாமல் எதிரி மீது இறுதி அறிக்கை தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.02.02 19:13:12 +0530

**மறுவிசாரணை இல்லை.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.02 19:13:22 +0530